தமிழ் தமிழ் என்று பேசுவது ஒரு நாகரிகம். தமிழை வைத்து வியாபாரம் செய்கிறார்கள். நான் தான் தமிழைப் பற்றி பேச வேண்டும். நீ பேசக்கூடாது என்றெல்லாம் பல பல பேரால் சொந்தம் கொண்டாடப்படும் தமிழ் உலகத்தில் ஒரு காலத்தில் ஒவ்வொரு மனிதனாலும் பேசப்பட்ட முதுமொழி.

ஆம், தமிழ் ஒரு பொது உடைமை உலகத்தில் முதன்முதலாக தோன்றிய மொழி தமிழ் நாகரிகங்கள் சில மதங்கள், மொழிகள், கலாசாரங்கள், நாகரிகங்கள் தோன்றிய 2000 வருடங்கள் தானாகின்ற நிலையில் சுமார் 20000 வருடங்கள் முன்பே தோன்றிய மொழி நம் தமிழ்மொழி.

ஹரப்பா, மொகஞ்சதாரோ, சுமேரிய நாகரிகங்களுக்கு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே தோன்றியது தமிழ் என்கிறார் ஆராய்ச்சியாளர்கள். ஆம் சுமேரியா நாகரிகத்தின் முதல் ஊரின் பேரே, ஊர், உலகின் முதல் மனிதன் தமிழனாகத்தான் இருந்திருக்க கூடும் என்று சொல்லும் மரபணு ஆய்வுகள்.

49 நாடுகளைக் கொண்ட குமரிக்கண்டம் எனும் மாபெரும் தமிழ் சாம்ராஜ்யம் கடலுக்கடியில் மூழ்கியதால் அதன் உண்மை தெரியாமல் போன சோகம் 200,000க்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளில் வெறும் பாதிகூட மொழி பெயர்க்கப்படாத நிலையில் திருக்குறள், அகநானூறு, புறநானூறு போன்ற ஒப்பற்ற நூல்கள் கிடைத்திருக்கின்றது. அப்போது அனைத்தும் மொழிப் பெயர்க்கப்பட்டால் காம்போடியாவில் உள்ள உலகின் மிகப்பெரிய கோவிலான ஆங்கோர் வாட்டை கட்டியது சூரியவர்மன் என்கிற பல்லவ அரசன் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும். உலகத்தில் மிகப்பெரிய கீசோ, பிரமிட்டை விட 8 மடங்கு பெரியதான தஞ்சைப் பெருங்கோயில் இராஜராஜசோழனால் 6 வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது எப்படி என்று இன்றும் வியந்து நிற்கும் ஆய்வாளர்கள் மத்தியில் இதைப் போன்றதொரு மாபெரும் அதிசயம் இன்னும் உலக அதிசயமாக ஏன் அறிவிக்கப்படவில்லை என்கிற கேள்வி.

உலகிற்கு நாகரிகம், கலாசாரம், கலை, அறிவியல், மருத்துவம் என அனைத்தையும் கற்றுக் கொடுத்த நம் தமிழர்களின் இன்றைய நிலைதான் என்ன?

தமிழின் பெருமை மறையவும், அழியவும் காரணமாக தமிழர்களே. இருப்பது மிகவும் வருத்ததிற்குரிய விசயம். இதற்கு தீர்வுதான் என்ன? சுலபம் ஒவ்வொருவரும் தமிழில் பேச ஆரம்பிப்போம். தமிழ் மேல் வெறி செந்தமிழ் தான் பேசவேண்டும் வேறு மொழிகளில் பேசக்கூடாது என்றெல்லாம் கூட இல்லை தெரிந்த தமிழில் தலைநிமிர்ந்து வெட்கப்படாமல் பேசினால் போதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் பெருமையை பரப்ப நீ யார் என்று யாரேனும் கேட்டால் தமிழன் என்று சொல்லாதீர்கள் மனிதன் என்று சொல்லுங்கள் ஏனெனில் உலகில் முதன்முதலில் மனிதர்கள் பேசியது தமிழில்தான் என்று நான் மட்டும் சொல்லவில்லை. அலக்கலியர் போன்ற ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

உடை, நாகரிகம், கலாசாரம், மதம், சாதி என அனைத்திற்கும் அப்பாற்பட்டது. நம் தமிழ், தமிழ்நாட்டில் பிறந்தவன் மட்டும் தமிழன் அல்ல. ஆபிரிக்கனோ, அமெரிக்கனோ, கறுப்போ, சிவப்போ தமிழ் மேல் பாசம், நேசம், மதிப்பு கொண்டு தமிழ் பேசும் ஒவ்வொருவரும் தமிழன் தான்.

**"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! "**

தொகுப்பு :
கோபாலகிருஷ்ணன் கோகுலவரதன்
2020 வர்த்தகம்

# சிந்திக்க சில மொழிகள்

- திடீர் முடிவுகள் திருப்பத்தைத் தரலாம் அது தீங்காகவும் இருக்கலாம்.
- அனுபவம் உனக்கு உலகத்தைக் காட்டும். அதன் பாதையில் உனது துன்பங்கள் விலகும்.
- நீ சரியென நினைப்பது தவறுமாகலாம் எனவே தீர்மானம் எடுக்கும் போது நிதானமாக இரு.
- அவசரமும் மனக்குழப்பமும் நிதானத்தை இழக்கச் செய்யும்.
- நிதானந்தான் நிம்மிதியின் ஊற்றாகும் எனவே நிதானத்தை இழக்காதே.
- கோபம் உனக்கே கொள்ளி வைக்கும். கோபத்தின் பிரதிபலன் நட்டமே ஆகும்.
- கோபத்தில் எடுக்கும் முடிவு அறிவு சார்ந்தாகாது ஏனெனில் கோபம் உனக்குள் குடியேறும் போதே அறிவு தானாக வெளியேறி விடும்.
- நல்ல முடிவுகளை எடுக்க காலந் தாழ்த்தாதே தாமதங்கள் தவறான முடிவுகளைத் தரலாம்.
- ஏணி உன்னை ஏற்றிவிடாது நீ ஏறுவதற்கு வழிவிடும் ஏறுவது உனது பொறுப்பு.
- உனக்குரிய பொறுப்புக்களிலிருந்து விலகாதே அதில் விருப்போடு ஈடுபடு.
- விரும்புவதுதான் முதல் முயற்சி வெற்றிக்கு இட்ட அத்திவாரம்.
- எதை நீ அடைய நினைக்கிறாயோ அதில் காதல் வை அதைப்பற்றி தெளிவாக அறிந்து கொள், அதை அடைவதில் தடைகள் இருக்காது.

திரு.வே.சுந்தரராஜன்
ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை போற்றுவோம்!

வயிற்றிலும் மார்பிலும் நம்மை
காலம் முழுவதும் சுமப்பவள் தாய்
மட்டுமே....
ஆயிரம் விடுமுறை வந்தாலும் அவள்
அலுவலகத்திற்கு மட்டும் விடுமுறையில்லை
அம்மாவின் சமையலறை!
இன்பம் துன்பம் எது வந்த போதிலும்
அன்னையின் மடியில் தவழும் காலம்
சொர்க்கமே!

பாசத்தில் தாலாட்டி உதிரத்தை பாலாக்கி
உயிருக்குள் அடைகாத்து தூக்கத்தை
தொலைத்து வாழும் தெய்வம்
கடல்நீரை கடன்வாங்கி
கண்கொண்டு அழுதாலும் உன் தியாகங்களுக்கு
ஈடாகுமோ!
வயது வித்தியாசம் பார்ப்பதில்லை
அம்மாவின் கொஞ்சல்கள்....
வலி நிறைந்தது என்பதற்காக விட்டுவிடுவதில்லை
தாய்மையை!
அன்பு கலந்த அக்கறையோடு சமைப்பதால்
தான் எப்போதும் அம்மாவின் சமையலில்
சுவை அதிகம்



நான் பார்க்கும் முதற் பெண் தரிசனம் அம்மா!
ஆழ்ந்த உறக்கத்தின் அஸ்திவாரம்
அம்மாவின் தாலாட்டு!
என்னை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தவளுக்கு
ஆயிரம் ஆயிரம் முத்தங்கள்!
தியாகங்களின் சொரூபம் அம்மா
மரண வாயிலை தொட்டு நம்மை ஈன்றவள் அம்மா!
தாய்மையை போற்றுவோம்! மதிப்போம்!

எஸ்.ஜனகன்,
2020 தொழில்நுட்ப பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பயணம்...

காலனிற்கு நேரம் சொல்லி கருவதனில் தோன்றினோம்
தாயின் அரவணைப்பிலே உலகம் கண்டோம்
ஐந்து வயது நிரம்பியது ஆரம்பமானது பள்ளி வாழ்க்கை
புதிதாக ஒரு வண்ணம் எனது வாழ்க்கையில்

என்னவென்று தெரியாது அடியெடுத்து வைத்தேன் - பள்ளியில்
சுற்றமாக நட்பும் துணையாக ஆசானும்
தாய் போல் சேயாக என்னை காத்து கலை வளர்த்து
ஆசிரியடமிருந்து ஆசி பெற்று ஆரம்பகல்வியிலிருந்து இடைநிலைப் பிரிவு

சுறுசுறுப்பான வாழ்க்கை தினமும் புது அனுபவம், புது ஆசான்கள்
பல பாடங்கள் பள்ளியின் நேரம் அதிகரித்தது மணி அடித்தால்
ஆரம்பமாகும் பாடங்களுக்கு மணி ஒலியே முடிவும் போராட்டங்களிற்கு
பின் க.பொ.த.சாதாரணதர சித்தி

உதித்தோம் உயர்தரம், நமக்கான வாழ்வின் பாதையின் இறுதி பாதையின்
இறுதி பாதையின் தெரிவு பயத்துடன் புதுப்பள்ளியில்
நமக்காக யார் உளார்? என தவழ்ந்து தொடங்கிய முதல்நாளை
இனிமையாக்கி தந்த நட்பு

ஏதிலார் என ஒதுக்காது, எனக்கானவள் என
உரிமை கொண்டாடிய நண்பிகள் என்றும் புன்னகை
எத்தனை கவலை உளம் தனில் எல்லாம் தணித்து விடும் நட்பு தனில்
திட்டங்கள் தீட்டாது தினம் தினம் புதுப்புது அனுபவம்
புன்னகையால் கண்டிக்கும் ஆசான்கள்

அனைத்தும் இன்னும் சொற்பகாலமே எனும்போது
மனதோடு சிறுதயக்கம் - இன்னும் நீண்டு விடாதோ எமது
பள்ளிப் பயணம்...




P.சுபாஷினி
2020 உயிரியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் கறிவேப்பிலைகள் (உருவகக் கதை)

பழக்கப்படாத பாதையில் அவன் பயணித்துக் கொண்டிருக்கின்றான். பயணம் பழகியதுதான் ஆனால் பாதையோ புதியது. விரும்பியேற்ற பயணம் என்றாலும் கூட பாதையோ அதிகாரங்களால் தீர்மானிக்கப்பட்டதாயிருந்தது. அதனால் தான் அவன் சேருமிடம் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறான். கடந்து வந்த பாதையில் எத்தனையோ, உலகத்தைச் செதுக்கும் சிற்பிகளை செதுக்கியிருக்கின்றான். அவனால் செதுக்கப்பட்ட சிற்பிகள் புதிய பல உலகங்களைச் செதுக்கியிருக்கின்றார்கள். இன்னும் ஆயிரமாயிரம் சிற்பிகளை செதுக்க வேண்டிய கடமை அவனுடைய தோளிலே சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அவனுடைய பயணப்பாதை மாற்றப்பட்டதால் சிற்பிகளைச் செதுக்கும் கனவுகள் கனவுகளாகவே போய்விடுமோ? எதிர்பார்ப்புக்களை வளர்க்காமலும் புதிய பாதையின் புதுமைகள் விளங்காமலும் திணறிக் கொண்டிருந்தான்.

கடந்து வந்த பாதையே உனது கடமை என்று அதிகாரத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவனும் ஆர்வத்தோடு அப்பாதையால் பயணித்து சிற்பிகளை செதுக்கும் காரியத்தை கச்சிதமாய் செய்து வந்தான். அதிகாரம் அவனை வாழ்த்தியது வரவேற்பளித்தது. நீண்ட பயணத்தில் இப்பாதையே நித்தியமானது. நிரந்தரமானது மாற்றபடுமென்ற சாதாரண மதிநுட்ப சிந்தனை கூட எழவேயில்லை. ஏனெனில் சிற்பிகளை செதுக்குவதே அவனது சிந்தனையில் ஊறிய கொள்கையாயிருந்தது. அதிகாரத்தின் அங்கீகாரத்தில் மாற்றமிருக்கவில்லை. வழமைபோல் அவனது உழைப்பின் குருதியை அட்டைகளாய் உறிஞ்சிக் குடித்தது.

அவனது பயண நியமனப் பாதை வேறு அவனுக்காக அதிகாரம் அங்கீகரித்துக் கொண்டிருக்கும். பாதை வேறு என்பதை அவன் அறியாதவனல்ல. நியமனப் பாதையில் தான் நீ செல்ல வேண்டுமென்ற எந்த நிர்ப்பந்தமும் அவனுக்கு இருக்கவில்லை ஆதலால் தனக்கு அங்கீகரிக்கப்பட்ட பாதையால் பயணிப்பதே கடமையென்பதை உணர்ந்தான். பயணம் தொடர்ந்தது. சிற்பிகள் செதுக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். காலம் கரைந்தது. உழைப்பின் சாறும் உறிஞ்சப்பட்டுக் கொண்டேயிருந்தது.

திடிரென அதிகாரத்தின் மனப் போக்கில் மாற்றம். 'உனது நியமனப் பாதை வேறு நீ பயணிக்கும் பாதை வேறு பாதையை மாற்றிக் கொள்' அதிகாரத்தோடு அறிவுறுத்தப்பட்டது. அவனது பயணம் ஸ்தம்பித்தது. சிற்பிகளை செதுக்கும் கடமைக்கு தடை ஏற்படுத்தப்பட்டது. அதிகாரத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாதையில் முட்கள் குவிக்கப்பட்டதாக அவன் உணர்ந்தான். நியமனப் பாதையில் பயணம் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டான். சட்டத்தை அமுல்படுத்துவதாக அதிகாரம் சாதாரணமாகச் சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் இதுவரை அதிகாரம் அங்கீகரித்த பாதை சட்டவிரோதமானதா? ஆம் எனில் சட்டத்தை மீறியது யார்? அதிகார வர்க்கத்திற்கு சட்டத்தை மீறும் அதிகாரம் கொடுத்தது யார்? எண்ணற்ற கேள்விகளுக்கு அவனது மனம் விடை தேடிக் கொண்டிருந்தது.

தனது அனுபவப் பாதையில் பயணிப்பதே சிற்பிகளைச் செதுக்க வசதியாயிருக்கும் என்ற எண்ணம் அவனுக்குள் அலை மோதியது. அதிகார வர்க்கதோடு பேசுவதால் ஆவது எதுவுமில்லை. இதை அவன் உணராமலும் இல்லை இருந்தாலும் அவன் பேசிப்பார்த்தான். 'நியமனப் பாதையில் தான் பயணிக்க வேண்டும் விரும்பினால் பயண ஓய்வு நேரத்தில் பழைய பாதையிலும் பாதம் பதிக்கலாம்' அதிகாரத்தின் பதில் அர்த்தமற்றதாய் இருந்தது.

'ஒரு பயணம் இரு பாதை' இதன் சாத்தியம் குறித்து சிந்தித்தான் சிரிப்புத்தான் வந்தது. அதிகாரத்தின் அர்த்தமற்ற போக்குகள் வேடிக்கையாகவே இருந்தது. சிற்பிகளை செருக்குவதே அதிகாரத்தின் இலக்காய் இருக்க வேண்டும். அவன் தெளிவாகவே இருந்தான். தனது நியமனப் பாதையில் பயணிக்க விடாது புதிய பாதையை அங்கீகரித்த அதிகாரம் உழைப்பை உறிஞ்சி விட்டு, தேவைக்குப் போடும் கறிவேப்பிலைகளாக தேவை தீர்ந்ததும் தன்னை வீசி விட்டதாக உணர்ந்தான்.

ஆனாலும் பயணத்தை அவன் வெறுக்கவில்லை. புதிய நியமனப் பாதையிலும் சிற்பிகளை செதுக்கத் தொடங்கினான். அதிகாரத்தின் நிர்பந்தத்தின் பேரில் அவன் சிற்பிகளை செதுக்கியதே இல்லை. சிற்பிகளை செதுக்குவது தனது ஆத்மார்த்த கடமையென நினைத்தான். தூக்கியெறியப்பட்ட கறிவேப்பிலைகளிலும் மருத்துவமுண்டு என்பதை அதிகாரம் அறிந்திருக்க வேண்டும்.

வே.சுந்தரராஜன்,
ஆசிரியர்



உன் மீது
உனக்கே
நம்பிக்கை
இல்லை
என்றால்,
கடவுளே நேரில்
வந்தாலும்
பயனில்லை...
--விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

நட்பெனும் கடலில்
நாமும் மிதந்தோம்
நல்லவர் நட்பை நாடி
நன்றியுடன் நடந்தோம்

நட்பெனும் செடியில் நாமும்
பூத்தோம்
நல்ல எண்ணங்களை எம்முள்
வளர்த்தோம்
பிரியாவிடையை
பிரிவடையும் நாளென்பதை
மறந்தோம்

புண்பட்ட நெஞ்சம்
புழுங்கி ஆறுதல் பெற...
புகழும் இகழும்
புன்னகையாய் ஏற்றோம்

பிரிவென்றும் நட்பில் இல்லை
இலட்சியத்தை அடைய என்றும்
உள்ளங்களுக்கு
சவால்கள்
சுமைகள் இல்லை

பிரிவே ஆயினும்
பிரியாது நம் நட்பு
பிரியாத வரம் வேண்டும்
பிரிந்தாலும் நட்பை
மறவாத
வாழ்வு வேண்டும்

Being A Good Friend



கோ.நிவேதிகா
2020 உயிரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இழந்து விடாதே!

தமிழ்வாடை இல்லாத தரணி வேண்டாம்!
தமிழ் பற்றி அறியாத தனையன் வேண்டாம்!
தமிழுக்கு இழுக்காகும் உடைகள் வேண்டாம்!
தமிழை அழுக்காக்கும் அலங்காரம் வேண்டாம்!
இலக்கியம் அறியா இதயம் வேண்டாம்!
இலக்கணப் பிழையுடன் காப்பியமும் வேண்டாம்!
குறையில்லா இன்பத்தில் முடிவாரும் இளைஞன் வேண்டாம்!
முடிவில்லா இன்பத்தில் முறையிலாயுவதியும் வேண்டாம்!

இருவர் அறியாது கதைக்கும் மொழியிலும்
இணைந்து எழுதும் தமிழிலும்
இங்கிலீசு கலக்க வேண்டாம்!
தரத்தை உயர்த்தி தரணியில் உன்னை
நீ தமிழனே... தங்கமுலாம் பூசினாலும் பிறப்பாய்!
பிறந்ததும் கூறிய அம்மா என்ற மொழியை
வளர்ந்ததும் மறந்து போன துரோகியா நீ...?

அயல்நாட்டு மோகம் ஆளைக் கொல்லும்
அறிந்துமா அவஸ்தையை அள்ளிக் கொண்டாய்!
தவறவிட்ட பொழுதுகள் மீண்டும் வராது
தமிழறியேன் என்ற சொல்லை
தகர்த்தெறிந்துவிடு – இல்லையேல்
தவறவிடப்போவது
உன் தமிழை அல்ல ...
தாய் நாட்டையும் அல்ல ... உன் தாயை ...
என்பதை என்றும் நினைவில் வை!

பி.சயனுஜா
2020 உயிரியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை தான் வாழ்க்கை

பொதுவாக மனித வாழ்வில் – நம்பிக்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணம் இதுதான். ஆனாலும் மனிதனிடையே வேறுபடுகின்றன. தெய்வ நம்பிக்கை என்று சொல்லிக் கொண்டு தெய்வத்தின் மீது பழியைப் போட்டு விட்டு எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வான் என்று வாழ்பவன் ஒருரகம். எல்லாம் அப்பா பார்த்துக் கொள்வார், அண்ணா பார்த்துக் கொள்வார், மனைவி பார்த்துக் கொள்வார் என்று மற்றவர்களை நம்பி தன் வாழ்வை ஒப்படைப்பவர்கள் இன்னொரு ரகம். தன்னையே நம்பி தானே உழைத்து வாழ்வில் முன்னேறுபவன் இன்னொரு ரகம்.

தன்மீது நம்பிக்கை கொண்டு வாழ்பவனே சிறந்த மனிதனாக பேசப்படுகின்றான். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது மனதில் ஒரு லட்சியம் – கனவு இருக்க வேண்டும். நன்றாகப் படித்து ஒரு வைத்தியராக – பொறியிலாளராக இப்படி உயர்ந்த பதவிகளுக்கு வரவேண்டும் என நினைக்கும் மாணவர்களுக்கு இன்றியமையாதது தன்னம்பிக்கை. என்னதான் வகுப்பில் ஆசிரியர் கத்திக் கத்தி பாடம் நடத்தினாலும் அதை கிரகித்துக் கொள்ளும் தன்மையும் ஆர்வமும் நான் உயர வேண்டும் அதற்காக படிக்க வேண்டும் என்று நம்புகின்ற மாணவனால் மட்டுமே வெற்றி பெற முடியும்.

இன்று நம்மிடையே மறைந்தும் – மறையாமல் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கிற பல பெரியோர்கள் எல்லாம் தன்னம்பிக்கையால் உயர்ந்தவர்களே. தாங்கள் உயர்ந்த இடத்தை அடைந்ததோடல்லாமல், நாமும் அதுபோல் வாழ்வில் முன்னேற வழிகாட்டிச் சென்றவர்கள்.

கிரேக்க தத்துவஞானி – சாக்ரடீசின் தாரக மந்திரம் என்ன? 'உன்னையே நீ அறிவாய் இதைத்தான் கடைசிவரை அவருக்கு விசமூட்டிக் கொல்லும் வரை சொல்லிக் கொண்டே உயிர் விட்டார்' இந்த தாரக மந்திரத்தின் பொருள் என்ன? உன்னை நீ அறிய வேண்டுமானால் உன்னில் உனக்கு நம்பிக்கை வரவேண்டும் – உன்னை நீயே ஆராய வேண்டும் மனதில் உறுதி பெற வேண்டும் – தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் இதையெல்லாம் நீட்டி முழக்காமல் உன்னை நீ அறிவாய் என்று சுருக்கமாய் சொல்லி வைத்தான்.

எனவே நம்பி நடக்காமல் – நம்ப நடப்போம் அந்த நம்பிக்கையை தன்னம்பிக்கையாய் வளர்த்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டு – இனிதே வாழ்வோம்.

பாலநிர்மல் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பான் நண்பன்!

சகதியில் விளையாடி
சலிப்பின்றி உறவாடி
புழுதியில் புரண்டோடி
அழுக்காய் திரியும் அன்பான
நண்பர்கள் நாம்!

ஒரே கருவினில் பிறக்கவில்லை – இருந்தும்
எந்த நெருக்கமும் நம்மை பிரித்ததில்லை
பள்ளியில் சந்தித்தோம்
வகுப்பறை தாண்டியும்
நட்பை சிந்திப்போம்!

சுயநலம் இல்லை நம்மில்
அதனால் பிரிவுகள் வந்ததில்லை
தினம் தினம் சண்டையிடுவோம்
ஆனால் இதயத்துடிப்பில் – நண்பனின்
நினைவை பார்ப்போம்

அழுதிருப்போம் ஆனந்தத்தில்
அமர்ந்திருப்போமா? பள்ளி ஆசனத்தில்
சிற்றூண்டிச் சாலையில்
ரொட்டி பறித்து உண்டதில்
எத்தனை ஆனந்தம் தோழா

தோளோடு தோள் கொடுத்து
கல்வியை மனதில் நிறுத்தி
நண்பன் சண்டையிடமட்டுமல்ல
சாதிக்கவும் தான் என்று
மார்தட்டி சொல்வோம்
வெற்றியின் வாசல்களில்!

C.கஜிவினி
2020 கணிதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமில்லை!

வந்தாலும் உன்னை மறக்கா இதயம்
வேண்டும்
ஜென்மம் ஒன்று இருந்தால் நீயே
வேண்டும்
உணவாக அல்ல
உயிர் கொடுக்கும் நட்பாக வேண்டும்!

கவிதை என்பது காயப்பட்ட
இதயத்திற்கு மருந்து......!
காதல் என்பது காயம்பட போகிற
இதயத்திற்கு விருந்து......!
நட்பு மட்டும்தான் என்றைக்கும்
இனிக்கும் கரும்பு......!

காரணம் இல்லாமல்
கலைந்து போக இது
கனவும் இல்லை
காரணம் சொல்லிபிரிந்து
போக இது காதலும் இல்லை
உயிர் உள்ளவரை தொடரும்
உண்மையான நட்பு

அ.பகிரதன்
2020 பொறியியல் தொழில்நுட்ப பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான காரியங்களுக்கு மகத்தான நம்பிக்கைகளே பிறப்பிடம்

— சுவாமி விவேகானந்தர்

நாளை என்பதை உங்கள் வசமாக்கிட காத்திருக்கும் அன்பு மாணவச் செல்வங்களே.......

"பாடப் பாடத்தான் ராகம்
எழுத எழுதத்தான் எழுத்து
படிக்க படிக்கத்தான் படிப்பு
முயற்சிக்க முயற்சிக்கத்தான் முன்னேற்றம்"

நீங்கள் செய்ய விரும்பும் எண்ணங்களின் மீது வைக்கின்ற மிகப்பெரிய முயற்சியுடன் கூடிய மகத்தான நம்பிக்கைகளே உங்கள் வெற்றிகளின் பிறப்பிடமாக அமையும்.

உங்களது எண்ணங்களுக்கும் கண்ணாடிக்கும் ஒரு மிகப்பெரிய இணைப்பு காணப்படுகின்றது. கண்ணாடி முன்பு யார் நின்றாலும் அதாவது ஏழையானலும்" செல்வந்தனானாலும் விம்பங்கள் மாற்றமடைவதில்லை. அவன் அழகானவனா? அழகற்றவனா? திறமையானவனா? திறமையற்றவனா? வெற்றியாளனா? இல்லை தோல்வியாளனா? நேர்மறை சிந்தனை உடையவனா? அல்லது எதிர்மறை சிந்தனை உடையவனா? என்றெல்லாம் கண்ணாடிக்கு தெரியாது. நீங்கள் எப்படி இருக்கின்றீர்களோ அந்த நிதர்சனத்தை" யதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக்காட்டி விடும் இயல்புடையது கண்ணாடி.

நீங்கள் ஆசைப்படுகின்ற அத்தனையும் உங்களால் நிறைவேற்ற முடியுமா? என்பதை சொல்லி விட முடியாது. ஆனால் உங்களின் எண்ணங்களின் கணங்களை பொருத்தே" வெற்றி எனும் வண்ணங்கள் வந்து சேரும் என்பதில் எதுவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. உங்களது எண்ணங்களும் கண்ணாடி போல தான்" நீங்கள் எத்தனை முறை அதை உடைத்தாலும்" எண்ணங்களின் அலைவரிசைக்கு ஏற்ப வெற்றிகளை கண் முன்னே காட்டிக்கொண்டே இருக்கும்.

தகுதியோடு ஒரு இலட்சியத்தை அடைய நினைக்கிறீர்கள் என்றால் அதற்காக நீங்கள் வெற்றி இலக்காக ஆயத்தமாகி விட்டீர்கள் என்பது தான் அர்த்தம். அதற்காக முதலில் நீங்கள் யார்? என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். உங்களது தனித்திறமை என்ன அத்திறமை கொண்டு வாழ்வில் எவ்வாறு முன்னேறுவது? என்பது பற்றி சற்றேனும் ஆராய்ந்து பாருங்கள். அல்லது உங்களிடம் நீங்களே வினவிப்பாருங்கள். மேலும் உங்களுக்காக ஒரு நாளில் 05 முதல் 10 நிமிடங்களாவது ஒதுக்கி வைத்துக்கொள்ளுங்கள். தினமும் உங்களது எண்ணங்களை நினைத்து அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை திரும்பத்திரும்ப கண்ணோட்டமாக பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தால் காட்சிப்பெட்டகமாக பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். இதனை நீங்கள் ஒவ்வொரு முறையும் வலிமையான எண்ணங்களோடு பாருங்கள்" இம் மகத்தான சிந்தனையானது தன் காரியங்களை வென்று முடிக்கும் நிலையை அடையும். இதனால் தான் தெளிவான சிந்தனையாளர்கள்" அனைத்து திட்டமிடல்களையும் சரியாக தேர்ந்தெடுக்கின்றார்கள்" அதற்காக விடாமுயற்சியுடன் உழைக்கின்றார்கள். தங்கள் எண்ணங்களில் தெளிவடைகின்றார்கள் பின்னர் வெற்றியுமடைகின்றார்கள்.

"நீங்கள் எவ்வளவு தூரம் ஓடுகின்றீர்களோ அவ்வளவு தூரம் தடைகளை தாண்டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்" கிடைக்கும். இங்கே எவ்வளவு தூரம் ஓடுகின்றீர்கள் என்பது முயற்சியை மட்டும் குறிப்பதொன்றாகிவிட்டது. அது இலட்சியத்தை அடைவதற்கான முயற்சிகளையும்" திட்டங்களையும் குறிக்கின்றது.

இந்த பிரபஞ்சத்தில் எல்லோருக்கும் சமமான வாழிடம்தான் படைக்கப்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் எவ்வளவு தைரியமாகவும்" திறமையாகவும் பயன்படுத்துகின்றீர்கள் என்பதைப் பொறுத்துதான் உங்களது எண்ணங்களின் வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது. வெற்றியாளர்க்கும் தோல்வியாளர்களுக்கும் உள்ள மிகப்பெரிய இடைவெளி "மகத்தான சிந்தனையுடனான விடாமுயற்சி" என்பதுதான்.

வெற்றிக்கான பாதையாக, **திருவள்ளுவர்** "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்கின்றார் இதனையே **தோமஸ் அல்வா எடிசன்** "தேவையானது 1% ஊக்கம் 99 விடாமுயற்சி" "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலும் முயற்சி செய்யாமல் இருப்பது தான் நமது பலவீனமே இன்னுமொரு முறை முயற்சி செய்து பார்ப்போமே என்னும் எண்ணம் தான் வெற்றிக்கு நிச்சயமானவை"

**மகாத்மாகாந்தி** அவர்களது விடாப்பிடியான அஹிம்சை கொள்கைதானே இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தது.

**பெர்னாட்ஷா** அவர்களது வாழ்க்கை மிகக் கொடுமை நிறைந்தது ஆனால் அவர் அறிவோடும் திறமையோடும் தினம் எழுதும் விடாமுயற்சியே அவரை பார் போற்றும் உலக அறிஞராக்கியது. மேலும் விடாமுயற்சிக்கும் நல் சிந்தனைக்கும் உதாரணங்களாக மேடம் கியூரி" மார்க்கோபோலோ என்று பலபேரை சொல்லிக்கொண்டே போகலாம்.

**ரவீந்தரநாத் தாகூர்** அவர்களது ஆரம்பக் காலத்து கவிதைகளை வங்கமொழி அறிஞர்கள் பலர் தொடர்ந்தும் பிழைத்திருத்தத்திற்கு எடுத்துக் கொடுப்பார்கள். அவ்வளவு அவமானப்பட்டவர்தான் இவர் ஆனாலும் அவரது விடாமுயற்சியே அவருக்கு நோபல் பரிசை பெற்றுக் கொடுத்தது என்றால் மிகையில்லை.

**விவேகானந்தர்** சொல்கின்றார் "வெற்றி பெறுவதற்கு தேவையானது முடிவில்லா விடாமுயற்சியும்" அதீதமான நம்பிக்கையும் தான். விடாமுயற்சி கொண்டவன் "நான் சமுத்திரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கொள்வேன்" "என் சங்கல்ப சக்தியால் மலைகளும் நொறுங்கி விழுந்துவிடும்" என்று சொல்வான். அது போன்ற சக்தியை கொண்டிரு அது போன்ற மன உறுதியைக் கொண்டிரு "நன்றாக உழைத்திரு" உனது குறிக்கோளை நிச்சயம் நீ அடைவாய்" எனவாறாக பலரும் இவ் உலகிற்கு எடுத்துரைக்கின்றனர்.

இந்த உலகில் முயற்சியை விட வேறொன்றும் சிறந்த இடத்தைப் பெற்றுவிட முடியாது. திறமை" மேதைத்தனம்" கல்வி இவ்வளவு இருந்தாலும் அதனுடன் விடாமுயற்சியும்" எதை அடைய வேண்டும் என்ற தெளிவான முடிவு மட்டுமே வெற்றிக்கு வழிகாட்டும் "சர்வ வல்லமை படைத்தது" என்றும் உலகில் சாதனையாளர்கள் எல்லாரிடத்திலும் அவரவர் துறைசார் அறிவோடு" விடாமுயற்சியும் இருந்து வருகின்றது அதனால் தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள்" சாதனை படைத்தார்கள்" இன்னும் தொடர்ந்து வருகிறார்கள்.

முயற்சி இல்லாமல் தெருகற்களாய் நின்று கொண்டு" விழலுக்கு இறைத்த நீராய் வேலை பார்த்துக் கொண்டு" ஆடைகளில் அழகு மெழுகு பொம்மைகளாய் நின்று கொண்டு" உள்ளத்தைப்பூட்டி உடல் உழைக்காமல் உட்கார்ந்து உண்டு வாழ்பவர் எல்லாருக்கும் முயற்சி என்ற ஒன்று அவசியம் தேவை. முயற்சி இல்லாத ஒரு செயல் சிறகில்லாத பறவை உயர பறக்க நினைப்பதற்கு ஒப்பாகும். வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு பாடத்தை கற்றுக்கொடுக்கின்றது. எந்தக் காரியமும் ஆரம்பிக்கும் போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள் கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயில்கின்றனர். கீழே விழுகிறோமே என்று முயற்சிக்காமல் விடுவதில்லை. இந்த சூட்சுமத்தை நீங்கள் புரிந்து கொண்டால் வெற்றிகள் உங்களைத் தேடி வரும் .அப்படி வெற்றிகள் உங்களைத் தேடி வர வேண்டுமானால் நல்ல சிந்தனைகளை விதைத்துக்கொள்ளுங்கள். இந்த பிரபஞ்சத்தில் எதை நீங்கள் அடைய விரும்புகின்றீர்களோ அல்லது எதை நிறைவேற்ற விரும்புகிறீர்களோ அதன் மீது மட்டுமே அதிகப்படியான கவனத்தை செலுத்துங்கள். தேவையற்ற எதிர்மறை எண்ணங்களை விதைத்து கொள்ளாதீர்கள்.

எண்ணங்கள் என்பது ஒரு மனிதனின் ஆழ்மனதிலிருந்து உருவாகக்கூடிய மிகப்பெரிய வலிமை பொருந்திய மிகப்பெரிய பிரம்மாஸ்திரம் ஆகும். அதை சிறு சிறு அற்ப விஷயங்களுக்கெல்லாம் பயன்படுத்தாதீர்கள். நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயல்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன.– சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.

"மகத்தான காரியங்களுக்கு மகத்தான நம்பிக்கைகளே பிறப்பிடம்" மகத்தான நம்பிக்கைகளுடன், மகத்தான காரியங்களுக்காக"

திருமதி. இ.அனுராஜா
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Prayer for Teacher

We thank thee for our Teachers
Our friends throughout the year
Whose hearts are ever willing?
To share a laugh or tear

We thank thee for their faith
In goodness and in truth
Which they ever strive to make
The goal of every youth

We thank thee for their vision
Of beauty, joy and love
For knowledge they impart
Of earth and heaven above

We pray thee bless our teachers
As with wondrous art
They lead us "Long life" s pathway
To rest within thy Heart.

Mrs.R.G.Jeyakumar,
Teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாமே இனியொரு பிறவி...!

பெண்ணென்று பூமிதனில்
பிறந்து விடின்
பெரும் பீடை இருப்பதாக
புலவனும் சொன்னான்
உண்மைதனை நானுமிங்கு
உணர்ந்து விட்டேன்.
ஒரு போதும் பெண் பிறவி
இனியும் வேண்டாம்!!

இஷ்டப்படி வாழ இங்கு
இடமுமில்லை
எதற்கு எடுத்தாலும் அடக்கு முறைகள்
பிடிக்கவில்லை
ஏனென்று எதிர்க்கேள்வி
கேட்டுவிடின்
ஏவுகணை போன்றதொரு
வார்த்தை விழும்!!

ஊமையாய் வாய்மூடி
வாழ்ந்திருப்பின்
உலகமே ஏமாளியாய்
அவளைப் பார்க்கும்
வாய்விட்டு வார்த்தை தனில்
உரிமை கேட்பின்
வாயாடி அவளென்று
வசைகள் பாடும்
மௌனமே சிறப்பென்று
வாழ்ந்திருப்பாள்
மமதையே அவளிடம்
உள்ளதென்பர்
அடக்கமாய் அவளிங்கு
இருந்தாலும்
அலங்காரம் என்று
கதைகள் கூறும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் விட்டு வெளிப்படையாய்
கதைத்து விடின்
மரியாதை அவளிடம்
இல்லையென்பர்
சினம் கொண்டு அவளெதையும்
எதிர்த்து நிற்பின்
சிறந்தவளில்லை என்றொரு
நாமம் கிட்டும்!

ஆட்டுவிக்கும் பொருளாய்
பெண்ணாகும் வரையே
அன்பும் கூட இங்கு
அடைக்கலமாகும்
அதிகாரம் தனையவள்
கைக் கொண்டாலோ
ஆணவம் அவளுக்கென்று
தூற்றிப் பேசும்!

விதவிதமாய் வேடங்கள்
போடச் சொல்லும்
விவஸ்தை கெட்ட
இம்மானிட பூமிதனில்
வேண்டாமே இனியொரு
பெண் பிறவி
வேண்டுவதும் இதுவன்றி
வேறெதுவும் இல்லை.........!

அ.டர்ஷனா
2020 வர்த்தகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமானத்தில் புதிய மாற்றங்கள்

ஐக்கிய நாடுகள் தேசிய கணக்கு முறைமை (U.N 2008) தேசிய வருமானக் கணிப்பீட்டில் புதிய முறையியலை அறிமுகம் செய்துள்ளது. இதற்கிணங்க 2015ம் ஆண்டிலிருந்து புதிய முறையியலுக்கு அமைவாக எல்லா உலக நாடுகளும் தேசிய வருமானக் கணிப்பீட்டினை செய்து வருகின்றன. இலங்கையின் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் புதிய மாற்றங்களை உள்வாங்கி 2015ம் ஆண்டிலிருந்து தேசிய வருமானக் கணிப்பீட்டை செய்து வருகிறது. இப்புதிய முறையின் அளவிடும் முறைகளிலும், தேசிய வருமான உள்ளடக்கங்களிலும் குறிப்பிடத்தக்களவான மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பேரினப் பொருளாதார ஆய்வுமுறையில் தேசிய கணக்கீடு அல்லது தேசிய வருமானக் கணிப்பீடு என்பது மிக முக்கியமானதாகும். உலகளாவிய ரீதியில் தேசிய வருமானத்தை கணிப்பீடு செய்வதற்கு மூன்று வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன

1. உற்பத்தி முறை (Production methods)
2. வருமான முறை (Income methods)
3. செலவீட்டு முறை (Expenditure methods)

மேற்கூறிய மூன்று வழிமுறைகள் மூலம் தேசிய வருமானம் கணிப்பீடு செய்யப்படினும் அவற்றின் பெறுமானம் ஒன்றுக்கொன்று சமனாகும்.

**உற்பத்தி வழிமுறைக் கணிப்பீடு**

2015ம் ஆண்டிலிருந்து தேசிய வருமான உற்பத்திக் கணிப்பீட்டில் 48 பொருளாதார நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டு அவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை அடிப்படை விலையில் மொத்த கூட்டிய பெறுமதி என அழைக்கப்படுகின்றது.

வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல் போன்றவற்றில் 16 பொருளாதார நடவடிக்கைகளும்

கைத்தொழில் 17 பொருளாதார நடவடிக்கைகளும்

பணிகளில் 15 பொருளாதார நடவடிக்கைகளும்

உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியானது உற்பத்தி வழிமுறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தி, மற்றும் மொத்த தேசிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் முறையினை பின்வரும் அட்டவணை 1.1 இல் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.1

| பொருளாதார நடவடிக்கைகள் | தொகை |
|---|---|
| 1. வேளாண்மை காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல் | XXX |
| 2. கைத்தொழில் | XXX |
| 3. பணிகள் | XXX |
| 4. அடிப்படை விலையில் கூட்டப்பட்ட பெறுமதி (1+2+3) | XXXX |
| 5. உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரிகள் | XXX |
| 6. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (4+5) | XXXX |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | XXX |
| 8. சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம் (6+7) | XXXX |

**வருமான வழியில் தேசிய வருமானக் கணிப்பீடு**

SNA 2008 புதிய தேசியக் கணக்கீட்டு அணுகுமுறையின்படி இலங்கையின் மொத்த உள்நாட்டு வருமானக் கூறுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 1.2

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் | |
|---|---|---|
| ஊழியர்களின் நட்ட ஈடுகள் | XXX | |
| மொத்த தொழிற்பாட்டு மிகை (2.1+2.2) | XXX | |
| 2.1 தேறிய தொழிற்பாட்டு மிகை | XXX | |
| 2.2 நிலையான மூலதன நுகர்வு | XXX | |
| கலப்பு வருமானம் | XXX | |
| உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த வரிகள் | XXX | |
| அடிப்படை விலையில் கூட்டப்பட்ட பெறுமதி (1+2+3+4) | | XXXX |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரி | XXXX | |
| சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை (5+6) | | XXXX |
| தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம் | XXX | |
| மொத்த தேசிய வருமானம் (7+8) | | XXX |
| தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள் | XXX | |
| செலவிடத்கு தேசிய வருமானம் (9+10) | | XXX |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செலவீட்டு முறையில் தேசிய வருமானம்

ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகள் மீதான செலவீட்டினை அளவீடு செய்வதே செலவு வழி தேசிய வருமானக் கணிப்பீடாகும்.

அதாவது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் நுகர்வோரினால் இறுதி நுகர்விற்கும் உற்பத்தியாளரினால் முதலீட்டிற்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. பொதுவான செலவு வழி தேசிய வருமான வழிக் கணிப்பீட்டின் கீழ் இரண்டாம் தர பாவனைப் பொருட்கள் தமது சொந்தத் தேவைக்கான பொருட்கள் மீதான செலவு போன்றவை உள்ளடக்கப்படுவதில்லை. இக்கணிப்பீட்டு முறையினை அட்டவணை 1.3 இல் காட்டலாம்.

**அட்டவணை 1.3**

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் | |
|---|---|---|
| 1. இறுதி நுகர்வுச் செலவு (1.1+1.2) | | XXXX |
| 1.1 வீட்டுத்துறை நுகர்வுச் செலவு | XXX | |
| 1.2 அரச நுகர்வுச் செலவு | XXX | |
| 2. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (2.1+2.2+2.3) | | XXXX |
| 2.1 நிலையான மூலதன ஆக்கம் | XXX | |
| 2.2 இருப்பு மாற்றம் | XXX | |
| 2.3 பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் | XXX | |
| 3. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு செலவு (1+2) | | XXXX |
| 4. தேறிய ஏற்றுமதி | XXX | |
| 5. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (3+4) | | XXXX |
| 6. தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் | XXX | |
| 7. சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம் (5+6) | | XXXX |
| 8. வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல்கள் | XXX | |
| 9. சந்தை விலையில் செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் (7+8) | | XXXX |

திருமதி. அருள்வாணி காந்தரூபன்
அசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை!

சூரியக் கதிர்களில்
ஜனித்துப்போன
நட்சத்திரச் சிசுக்களை
தாலாட்டுகிறாள்
நிலவாள்!

தானும்
தேய்ந்து தேய்ந்து...
சிலவேளைகளில்
நிலவற்ற வெறுமைகளையும்
ஈந்து நிற்கிறது
வான்...

தன்னந் தனியாகும்
விண்மீன் குஞ்சுகளைக்
கவ்வக் காத்திருக்கும்
திருட்டுப் பூனைகளாய்
போதை!

இன்னமும் - தம்
சிசுக்களுக்காய்
பணம் பொறுக்கும்
சூரியர்களும்... சந்திரர்களும்..
வெளிநாடுகளில்
எதுவும் தெரியாமல்!



"கொட்டிய ஆரன்"
சு.சிவசங்கரன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழுவின் ...

வளர்ச்சியில் புரவி வேகம் கொண்ட நிற்கும் எமது பாடசாலை தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் இரண்டாவது வையாளியில், மாணவர்களின் வெற்றித் தடங்கள், அவர்களின் படைப்புக்கள், பாடசாலையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் என்பன சுவடுகளாக மீந்து நிற்கின்றன.

வையாளியை அலங்கரிக்கும் மாணவகளினது ஆக்கங்கள் யாவும் பாடசாலைப் பருவத்தில் தாம் துள்ளி ஓடி விளையாடிய காலம் முதல் பாடசாலையில் இருந்து விடைபெற்று செல்லும் காலம் வரை தம் பசுமை நினைவுகளையும், அனுபவங்களையும் பல படைப்புக்களாக வெளிப்படுத்திச் செல்கின்றது.

பிரிவுபசார மலரிற்கு ஆசியுரை வழங்கிய அதிபர் அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய உதவி அதிபர் அவர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும், குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் இம் மலரினை அச்சிட்ட பென்விஷன் அச்சகத்திற்கும் மற்றும் பலவழிகளில் உதவிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மலர்குழுவின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

மலர்க்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QUEEN OF PRINTING

# Ben Vision Printers & Publication

## பென் விஷன் அச்சகம்


## බෙන් විෂන් පිටපත් මුද්‍රණාලය

OFFSET PRINTING, COLOUR PRINTING,
DIGITAL PRINTING, STICKER PRINTING,
SCREEN PRINTING, INVITATION CARDS,
LAMINATING, SCANNING, LEAFLETS,
VISITING CARDS, TYPE SETTING
(TAMIL / SINHALA)

#15/5, Huskision Road
Trincomalee, Sri Lanka
E-mail - benvisionprinters@gmail.com

Contact:
T | 0262225984
M | 0769000035
M | 0775718119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org